

தந்தை பெரியாரின் 52வது நினைவு நாளை ஒட்டி புதுக்கோட்டை மாவட்ட தலைமை கழக அலுவலகமான பெரியண்ணன் மாளிகையில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு புதுக்கோட்டை வடக்கு செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர்.கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், அரு.வீரமணி, கே.ஆர்.என்.போஸ், மாநகர பொறுப்பாளர்கள் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், கார்த்திக் தொண்டைமான், க.மதியழகன், கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், பூங்குடி எம்.சிவா, செந்தாமரை பாலு, ரமேஷ் , கி.சுப்பிரமணி, ஆ.மரிய எட்வின், தியாகி, பிரேம் ஆனந்த், மேலவிடுதி ஆறுமுகம் மற்றும் கழக முன்னோடிகளும், மேலும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகளும், மாமன்ற உறுப்பினர்களும், கழக உடன்பிறப்புகள் பலரும் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில, மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து,நான்கு இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், மாவட்ட துணைச்செயலாளர் சன்.சம்பத், ஒன்றிய கழகச்செயலாளர் எம்.இராஜ்குமார் மற்றும் தோழமைக்கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### முதல்வருக்கு பதில் தருவதாக நினைத்து

# உளறிக் கொட்டி பீலாவிடும் அடிமை பழனிசாமி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

**சென்னை, டிச.29– சட்டமன்றத்தில் முதலமைச்சர் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடும் பழனிசாமிக்கு OPEN CHALLENGE என பீலா தேவையா? என எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.**



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சியில் ஓபன் சேலஞ்ஜ் விடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பதில் தருவதாக நினைத்து, உளறிக் கொட்டியிருக்கும் அடிமை எதிர்க் கட்சித் தலைவரே...

திமுக அரசு விஷயம் என்றால், முழித்துக் கொள்வதும், ஒன்றிய அரசு விவகாரமாக இருந்தால் கண்ணை மூடிக் கொள்வதும் என உங்கள் செயல்பாடு உருமாறுவது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா? அமித்ஷா முன்பு செய்தியாளர்களிடம் பேச அஞ்சும் அடிமை பழனிசாமி, சூனா பானா வேடம் தரிக்கிறார்?

கள்ளக்குறிச்சி மாவட்டம் உருவாக்கினால் போதுமா? பெயர் வைத்தால் குழந்தை தானாக வளர்ந்துவிடுமா? அந்தக் குழந்தைக்குச் சத்தான உணவைத் தர வேண்டாமா? மாவட்டத்தை உருவாக்கினால், அதனை நிர்வகிக்கக் கட்டடம் வேண்டாமா?

**கள்ளக்குறிச்சியில் தற்காலிக ஆட்சியர் அலுவலகம் திறந்த எடப்பாடி!**

கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் தற்காலிகமாக கலெக்டர் அலுவலகத்தை வைத்துவிட்டுப் போனீர்கள். திமுக அரசு வந்த பிறகுதான் 2024 செப்டம்பரில் கலெக்டர் பிரசாந்த் அவர்களால் புதிய கலெக்டர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எதையும் டிவியை பார்த்துத் தெரிந்து கொள்ளும் பழனிசாமிக்கு இது தெரியாதா? அப்படி அடிக்கல் நாட்டப்பட்ட கட்டடத்தை முதல்வர் திறந்து வைத்ததும் ஏன் எரிகிறது?

‘அதிமுக ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுகிறோம்’ என்கிறார் பழனிசாமி. 2015 ல் சென்னையில் பெருவெள்ளம் ஏற்பட்ட போது, தனியாரும் தன்னார்வலர்களும் அளித்த நிவாரணப் பொருட்களில் எல்லாம் தேடித் தேடி ஜெயலலிதாவின் படத்தை ஸ்டிக்கர் ஒட்டியவர்கள்தானே நீங்கள்! பட்ஜெட் சூட்கேஸ், குதிரை, குழந்தை, மணமக்கள் என எதையும் விட்டு வைக்காமல் அவர்கள் மீதெல்லாம் ஸ்டிக்கர் ஒட்டி தமிழ்நாட்டின் மானத்தை அகில உலகிற்கும் காட்டியவர்களுக்கு எப்போதும் ஸ்டிக்கர் பற்றிய நினைப்புதான் இருக்கும்!

**எடப்பாடி ஆட்சியின் அவலங்களைச் சொல்லவா?**

பரமக்குடி துப்பாக்கிச் சூடு, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, கிரானைட் கொள்ளை, கொடநாடு கொலைகள், கூவத்தூர் கூத்துகள், மவுலிவாக்கம் கட்டட விபத்து, மக்கள் நலப் பணியாளர்கள் போராட்டம், தர்மபுரி கலவரம், சாத்தான்குளம் இரட்டை மரணம், நிர்மலாதேவி விவகாரம், ஜல்லிக்கட்டு போராட்டம் என சந்தி சிரித்தது எல்லாம் யாருடைய ஆட்சியில்? இதில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தாராம். உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா? இன்னும் பட்டியல் போட முடியும். நீங்கள் மூச்சு இரைக்க வாசிக்க வேண்டியிருக்கும் என்பதால் குறைத்துச் சொல்லியிருக்கிறோம்.

20 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் என்று சொன்னதும் பழனிசாமியின் அடிவயிறு ஏன் எரிகிறது? தேர்தல் வாக்குறுதி என்பது 5 ஆண்டுகளில் நிறைவேற்றுவது. அதனை ஏன் நான்கரை ஆண்டுகள் கழித்துக் கொடுக்கிறீர்கள்? எனக் கூச்சமே இல்லாமல் கேள்வி எழுப்புகிறார் பழனிசாமி.

அதிமுக ஆட்சியில் அம்மையார் ஜெயலலிதா கொண்டு வந்த லேப்டாப் திட்டத்தை நாங்கள் முடக்க நினைக்கவில்லை. அதனால்தான் அந்தத் திட்டத்தைத் தொடர்கிறோம். ஆனால், எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் 2019ஆம் ஆண்டு வரை மட்டுமே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஜெயலலிதா கொண்டு வந்த திட்டத்தையே முடக்கிவிட்டு பேச்சை பாருங்க... எகத்தாளத்தை பாருங்க... லொள்ள பாருங்க..!

**சட்டப்பேரவையில் புறமுதுகு காட்டி ஓடும் பழனிசாமி!**

‘என்னோடு நீங்கள் நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? அதிமுக ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். திமுக ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா?' என கேட்டிருக்கிறார். இதற்கு எதற்கு மேடை போட வேண்டும்?சட்டமன்றத்தில்தான் நேருக்கு நேர் பேசலாமே! அங்கே முதலமைச்சர் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல் வெளிநடப்பு என புறமுதுகு காட்டி ஓடுபவருக்கு OPEN CHALLENGE என பீலா தேவையா?

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட பாக எண் 115 ல் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரை கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எம்.எஸ். கணேஷ்குமார் ஆகியோர் தேர்தல் பரப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் பகுதி தேர்தல் ஒருங்கிணைப்பாளர் கருணாநிதி, சிவராமன், அருண்குமார், மோகன்ராஜ், பிஎல்ஏ2 சிவாஜி,பிடிஏ சண்முகம், பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) பொன்னையன், வேல்முருகன், ராகிலா, காசி, சுரேஷ், செல்லதுரை, தேவராஜன், முத்துக்குமார், செல்வராசு, பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.சந்திரன் வரவேற்புரை!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா! இருசக்கர வாகனம் விழிப்புணர்வு பேரணி!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - எஸ்,ரகுபதி - சிவ,வீ,மெய்யநாதன் பங்கேற்பு!

*புதுக்கோட்டை டிச.29 உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்ன வாசல் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தலைகவசம் வழங்கும் விழா மற்றும் இருசக்கர வாகனம் விழிப் புணர்வு பேரணி விழா இன்று 29.12.2025, திங்கட் கிழமை எண்ணை ஊராட்சி மேலப்பட்டியில் மாலை 4.00 மணியளவில் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.*

*அன்னவாசல் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்*

*மு.பி.மணி, கே.ஆர். என்.போஸ், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, எம். கோவிந்தராஜ் மு.பி.ம. சத்தியசீலன் அ.இளங்குமரன் கே.பி.அய்யப்பன் , ஆர். எம்.செந்தில்குமார் டி.செல்வம், எஸ்.ராஜேந்திரன், ஆர்.முத்துச்செல்வம், சித. சண்முகம், எம்.முத்துச் சாமி பழ.பாண்டியன் பி. ராஜேந்திரன் முத்து லெட்சுமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*பள்ளி கல்வித்துறை அமைச்சர், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி, கணிம வளத்துறை அமைச்சர்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தலை கவசம் வழங்கி, இரு சக்கர வாகன பேரணியை துவக்கி வைக்கின்றனர். விராலிமலை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, தலைமை கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள பெரியண்ணண் அரசு, கவிச்சுடர் கவிதை பித்தன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான் மற்றும் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் பி.டி.அரசகுமார், டாக்டர் அண்ணாமலை ரகுபதி, செ.அசோக்பாண்டியன்,*

*வி.என்.மணி அரு.வீரமணி, சுப.சரவணன், எம். லியாகத் அலி, எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், வே.ராஜேஷ்,*

*மு.க.ராமகிருஷ்ணன், வெ.முத்துகிருஷ்ணன் எம். பரமசிவம் தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, சி.சண்முகம், மா.தமிழ் அய்யா, சி..சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாஜலம், ஆர்.ஆர்.சாமிநாதன், உ.முருகேசன், பி. அண்ணாத்துரை,*

*என்,சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத் துரை, சி.ஆர்.வி.சித்ரா, எம்.எம்.பாலு, முனைவர் செ.குறிஞ்சி வாணன், பூங்குடி எம்.சிவா, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், உஷா ராணி, அ.பிரபா, உரக்கடை எம்.கருப்பையா மஜித் முபாரக் , டி.சூசைராஜ், வி.என்.எம். பாலு. வி.ஜி.ஆர்.மணிவண்ணன், சி.அரங்கநாயகம், ஆர்.டி.ஆர்.ராமசாமி, எம். சுப்பையா, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, கே.கணபதி கவிவேந்தன், எம். வேலுச்சாமி, இபி சண்முகம், கே.சிவசுப்பிர மணியன், எஸ்.நிஜாமுதீன், டாக்டர் கே.என்.அமானுல்லா, ஏ.சுந்தர்ராஜ், ஆர்.சுப்பையா(எ) ரவி, எம்.வி.முத்தையா, மாங்குடி ஆர்.ஜே.அண்ணாத் துரை, எம்.பி.எஸ்.பாரி, சி.மணி, வழக்கறிஞர் பாலமுருகன், சிப்காட் சதீஷ்குமார், தங்கமணி, சி.சின்னத்துரை, கை,பழனிச்சாமி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர். முடிவில் இலுப்பூர் பேரூர் கழக செயலாளர் வை. விஜயக்குமார், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம். எஸ்.ஏ.முகம்மது ரிஷா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையச் சூரியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### இளைஞர் எழுச்சி நாள் விழா!

# கரூர் மாவட்டத்தில் கிரிக்கெட் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு வி,செந்தில் பாலாஜி பரிசுகள் வழங்கினார்!

கரூர்,டிச.29–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், கரூர் மாவட்ட கழகம் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் 15 ம் தேதி தொடங்கியது. இந்த விளையாட்டு திருவிழாவில், டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான், டர்ஃப் கிரிக்கெட்,

சிலம்பம் ஆண் பெண்களுக்கான போட்டிகள், கபடி ஆண், பெண்களுக்கு போட்டிகள், சதுரங்கம் போட்டிகள், ஆடவர் மகளிருக்கான மாரத்தான் போட்டிகள், சைக்கிள் போட்டிகள் ஆண் பெண்களுக்கான இறகுபந்து போட்டிகள், நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 2,05,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் கிரிக்கெட் போட்டிகள், கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி நடைபெற்றன.

முதல் பரிசை பால்மடைப்பட்டி STYEN 11 அணியும், இரண்டாவது பரிசை பாண்டியன் பாய்ஸ் அணியும், மூன்றாவது பரிசை வேலாயுதம்பாளையம் சரவணா பிரதர்ஸ் அணியும், நான்காம் பரிசை தாந்தோனி ICC அணியும் வென்றனர். சிறந்த பேட்ஸ்மேன் விருதை STYEN 11 அணியை சேர்ந்த சுகுந்தன் , சிறந்த பவுலருக்கான விருதை பாண்டியன் பாய்ஸ் அணி வீரர் கனகராஜ், சிறந்த ஆல்ரவுண்டருக்கான விருதை STYEN 11 அணியை சேர்ந்த காமராஜ் ஆகியோர் வென்றனர்.


கரூர் மாவட்ட கழக செயலாளர் வி செந்தில் பாலாஜி எம்எல்ஏ வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். மேலும்

கலந்துக் கொண்ட அனைத்து அணி வீரர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களையும், வென்ற அணிகளுக்கும் வீரர்களுக்கும் அன்பான வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.பி. முனுசாமி

**டிசம்பர் 29 (2016)**



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒன்றுபட்ட தருமபுரி மாவட்ட அவைத்தலைவராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1980ல் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராகவும், விவசாய வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநராகவும், நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வ. துரை

**டிசம்பர் 29 (1994)**



**தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திண்டிவனம் நகரக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்.**

**கழகத்திற்குச் சோதனை வந்தபோது உறுதி குலையாமல் கழகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடி காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**